மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு எது நன்மை என்பதை இந்த அரசு ஆய்ந்து தான், இந்த 'பால்பே வேஜஸ் என்ற ஊதியத்தைத் தருவதற்கு இந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறது. இந்த அறிக்கைமேல் ஆட்சேபணை வந்திருக்கிறது. ஆணையாளர் அனுப்பிய கருத்தை இந்த அரசு பரிசீலனை செய்கிறது. இறுதி அறிக்கை விரைவிலே வெளிடப்படும். அப்போது தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், எது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்த்து ஆவன செய்யப்படும்.

(இ) இளம்பிள்ளை வாத நோய்த்தடுப்பு மருந்து.

திரு. மி. வின்சென்ட் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து கிடைக்காதது குறித்து'' மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோயைத் தடுப்பதற்கான மருந்து இந்திய அரசினால் பம்பாயிலுள்ள ஹாப்கின் பேயோபார்மாசுடிகல் கார்ப்பரேஷன் லிமிடெட் (Haffkine Bio Pharmaceutical Corporation Limited) என்ற நிறுவனத்தின் மூலமாக இலவசமாக வழங்கப்படுகிறது. 10-4-81 வரை தமிழ் நாட்டிற்கு 6, 52,000 வேளை மருந்துகள் (Doses) வழங்கப்பட்டுள்ளன. 1981—82 ஆம் ஆண்டில் மாதந்தோறும் 50,000 டோஸ் மருந்துகள் வழங்கவும், தேவையானால் அதிகமான அளவும் வழங்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையில் இந்த வியாதியால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்த போது, பம்பாயில் உள்ள ஹாப்கின் நிறுவனத்திடமிருந்து 50,000 டோஸ் மருந்துகள் விமானம் மூலம் தருவிக்கப்பட்டு மாநகராட்சி தாய் சேய் மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டது,

தமிழ்நாட்டில் தாதா மருந்து நிறுவனம் மற்றும் கெமிக் ஆய்வகம் (Chemech Laboratory) மருத்துவர்களுக்கும், தனியார் மருத்துவமனைகளுக்கும் மருத்துவ விடுதிகளுக்கும் ஏனைய மருந்துக் கடைகளுக்கும் அவரவர்கள் தேவைக்கேற்ப இந்த மருந்தை வழங்குகிறார்கள்.

மேற்படி தனியார் நிறுவனங்களிலும், தனியார் மருந்துக் கடைகளிலும் மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும் மற்றும் மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மருத்துவ மனைகளிலும் போதிய அளவு இம்மருந்து கைவசம் உள்ளது, எனவே எந்த பதட்டமும் அடையத் தேவையில்லை.

1981 மே 12]

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலியோ ஓரல் டிராப், மைனஸ் 2 சென்டி கிரேடிலே வைக்கவேண்டும். அதை வைக்கத் தவறினால், சில நேரங்களிலே சக்தி இழந்தும், சில சமயங்களிலே குழந்தைகளுக்கு ஆபத்தும் விளைவிக்கக் கூடும் என்பது அரசுக்குத் தெரியுமா? அம்மாதிரி உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய அந்த வயால் பிராசஸ் சரியான முறையிலே வைக்கப்படாமல் உள்ள விநியோகஸ்தர்களுடைய லைசன்சை இந்த அரசு பறிமுதல் செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வயாலை கூலாக உள்ள ஐஸ் பெட்டியில் வைக்க வேண்டுமென்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். சரியான வகையில் அதை வைத்திருக்கிறார்களா, இல்லையா என்பதை அவ்வப்போது கண்காணிக்க டிரக் இன்ஸ்பெக்டர்கள் மூலமாக ஆங்காங்கு அனுப்பி, அந்த வயால்களை சோதனை செய்து, கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம். அந்த பிராசஸ் என்னவென்றால் அது எந்த இடத்தில் தயாரிக்கப்படுகின்றதோ, அந்த இடத்திலிருந்து விநியோகம் செய்யக்கூடிய இடம் வரையில், கூலாக வைக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட இடத்திலேயே கூலாக வைக்க வேண்டும். அதற்குப் பிறகு ஹோல்-சேல் வியாபாரம் செய்யக்கூடிய இடத்திலும் கூலாக வைக்கவேண்டும். பிறகு மருத்துவமனையாக இருந்தாலும், அல்லது வேறு கடைகளாக இருந்தாலும், கூலாக வைக்கவேண்டும். அதற்குப் பிறகு டாக்டர்களுக்கு வருகின்ற நேரத்தில் அங்கும் கூலாக வைக்க வேண்டும். ஆகவே, எல்லா இடங்களிலும் நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், ரெப்ரிஜிரேட்டரில் மட்டும் வைத்தால் போதாது; பல நேரங்களில் கரண்ட் நின்று விட்டால், அது 'வார்ம்'-ஆக ஆகிவிடும். அந்த கூலிங் எபெக்ட் பிரேக் ஆகும் போது, ரேபிரிஜிரேட்டரில் வைத்தாலும், தெர்மாஸ் பிளாஸ்கில் பக்கத்திலே ஐஸ் கட்டிகளை வைத்து, குளிர்ந்த நிலையிலே வைக்கவேண்டும் என்று மிகத் தெளிவாக ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று சொல்லியிருப்பதோடு. அதைக் கண்காணித்துக் கொண்டும் வருகிறோம். இந்த விஷயத்தில் தவறு ஒன்றும் இல்லை. நடைமுறையில் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வயாலிலும் ஓபன் பண்ணினால் 15 டோஸ் இருக்கிறது. ரஷ்யன் வயாலில் 25 டோஸ் இருக்கிறது, பெல்ஜியம் வயாலில் 50 டோஸ் இருப்பதாகச் சொல்லப்படுகிறது ஒரு, வயாலை ஓபன் பண்ணினால், அதை முழுமையாக ஒரே நாளில் போடவேண்டுமென்பது உண்மையா? ஆனால் பல டாக்டர்கள் அதை 2. 3 நாட்கள் வைத்து போடுவதால். அதன் பொடன்சி குறைகிறது என்பதும், அதனால் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படுகிறது என்பதும் உண்மையா? உயிரைக்

காப்பதற்காக படித்து பட்டம் பெற்ற டாக்டர்கள் இத்தகைய தவறுகளைச் செய்தால் அவர்கள் மீது கடும் தண்டனை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே. அதிலே ஒரு வயாலை ஓபன் செய்துவிட்டால் எல்லா டோசும் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இல்லை. ஏனென்றால் கொடுத்தவுடனே, அதை எடுத்து ரிப்பிரிஜீரேட்டரில் வைக்க வேண்டியது மிகவும் அவசியம். அத்தோடு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரியாக உடனடியாக கொடுக்க வேண்டுமென்ற ஒரு தவறான கருத்தைப் பரப்ப வேண்டாம் என்பதற்காக, உங்களுக்கு திட்டவட்டமாக சொல்கிறேன், அப்படிப்பட்ட நிலைமை இல்லை,

[முற்பகல் 11.40]

இப்போது கூட அநாவசியமாக எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். போலியோ வேக்சின் கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை. இதற்காக ஒரு புள்ளிவிவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தருகிறேன். நம்முடைய 'சைல்ட் ஹெல்த் ஆஸ்பத்திரியில்' எக்மோரில், உள்ளது, அதில் 4,025 டோஸ் கைவசம் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு தாதா பார்மசிடிகல்ஸில் 4,000 டோஸ் இருக்கிறது. ஸ்பென்சர்ஸ் அண்ட் கோவில் 3,000 டோஸ் கைவசம் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மற்ற இடங்களில் திருச்சி, மதுரை போன்ற இடங்களிலும் ஏராளமான அளவு நாம் இந்த மருந்தை வைத்திருக்கிறோம். எந்தவிதமான பற்றாக்குறையும் இல்லை. எந்தவிதமான பீதிக்கும் இடமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ). கண்நோய் தொற்றுநோயாகப் பரவுதல்

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வி. வி. சுவாமிநாதன்); "சென்னையில் கண் நோய் தொற்று நோயாகப் பரவுவது குறித்து" திருவாளர்கள் செ. இராமலிங்கம், இரா. தாமரைக்கனி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி. கா. நல்லப்பன், ஜே. ஹேமச்சந்திரன். ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னையில் கண் நோய் தொற்று நோயாகப் பரவுவது குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.